# தென்காசி நகர்மன்ற சாதரணக் கூட்டம்  17.10.2022

## மன்றப்பொருள் 1

இந்நகராட்சி பழைய வார்டு எண்.27, புதிய வார்டு எண்.33, ஆசாத் நகர் தெருவில் வார்டு–சி, பிளாக் – 39, நகரளவை எண்–68 டவுண் சர்வே பீல்டு ரிஜிஸ்டரின்படி அமைந்துள்ள காளியம்மன் கோவில் பொதுமக்கள் வழிபடக்கூடிய பொதுவழிபாட்டு தலமாக பயன்படுத்தப்பட்டு வருவதால், கோவில் நிர்வாகி அக்கட்டிடத்திற்கு சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டி விண்ணப்பித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.973/2022/அ1

**தீர்மானம் எண் : 167**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 2

இந்நகராட்சி பழைய வார்டு எண்.19, புதிய வார்டு எண்.21, சொர்ணபுரம் தெருவில் வார்டு–பி, பிளாக் – 30, நகரளவை எண்–68 டவுண் சர்வே பீல்டு ரிஜிஸ்டரின்படி அமைந்துள்ள மஸ்ஜிதுல் முபாரக் ஜீம்ஆ பள்ளிவாசல்,  பொதுமக்கள் வழிபடக்கூடிய தொழுகை கூடமாக பயன்படுத்தப்பட்டு வருவதால், எனவே மேற்படி தொழுகை கூடமாக உள்ள அக்கட்டிடத்திற்கு அதன் தலைவர் சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டி விண்ணப்பித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1857/2022/அ1

**தீர்மானம் எண் : 168**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 3

இந்நகராட்சி வார்டு எண்.09 , பாறையடி 2ம் தெருவில் வார்டு–பி, பிளாக் – 37, நகரளவை எண்–14/1A டவுண் சர்வே பீல்டு ரிஜிஸ்டரின்படி அமைந்துள்ள அல்மதீனா டிரஸ்ட் பொதுமக்கள் வழிபடக்கூடிய தொழுகை கூடமாக பயன்படுத்தப்பட்டு வருவதால், பயன்படுத்தப்பட்டு வருவதால், மேற்படி தொழுகை கூடமாக உள்ள அக்கட்டிடத்திற்கு அதன் தலைவர் சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டி விண்ணப்பித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1873/2022/அ1

**தீர்மானம் எண் : 169**

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 4

இந்நகராட்சி வார்டு எண்.04 , இரயில்வே ரோட்டு தெருவில் வார்டு–பி, பிளாக் – 26, நகரளவை எண்–9 டவுண் சர்வே பீல்டு ரிஜிஸ்டரின்படி அமைந்துள்ள காளியம்மன் கோவில் பொதுமக்கள் வழிபடக்கூடிய பொதுவழிபாட்டு தலமாக பயன்படுத்தப்பட்டு வருவதால், கோவில் நிர்வாகி அக்கட்டிடத்திற்கு சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டி விண்ணப்பித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2118/2022/அ1

**தீர்மானம் எண் : 170**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 5

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட இரயில்வே மேட்டுத்தெருவில் குடியிருக்கும் செல்லையா (இறப்பு) மற்றும் 10 நபர்கள் சேர்ந்து தென்காசி நகராட்சிக்கு எதிராக பொது நடைப்பாதை ஆக்கிரமிப்பு தொடர்பாக தென்காசி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட அசல் வழக்கு ஒ.எஸ்.எண்.195/2001 மற்றும் E.P.I.A.No.49/2022க்கு இந்நகராட்சியின் சார்பாக இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.சுபசேகர் அவர்கள் ஆஜராகவும், மேற்கண்ட வழக்கிற்காக உத்தேச வழக்கு கட்டணம் ரூ.10,000/—க் கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2170/2022/எப்1

**தீர்மானம் எண் : 171**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 6

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் அரசு மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான நடுநிலைப்பள்ளிகள் மற்றும் துவக்கப்பள்ளிகள் உள்ள கழிப்பறைகள்ள சுத்தம் செய்யும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட், இராஜபாளையம் என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத் தீர்மான எண். 987 நாள். 28.05.2021ன்படி ஏற்கனவே உள்ள விலைவிகிதத்தில் 01.06.2021 முதல் 31.05.2022 முடிய ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்தும் அதற்கான செலவினத்தினை கல்வி நிதியில் மேற்கொள்ளவும், அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி நிறுவனத்திற்கு 01.06.2021 முதல் 31.05.2022 முடிய உள்ள காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

தற்போது பணிகாலம் முடிவடைதாலும், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி உத்திரவு பிறப்பிக்கப்பட வேண்டியுள்ளதால் அதுவரைக்கும் 01.09.2022 முதல் 30.11.2022 முடிய உள்ள மூன்று மாத காலத்திற்கு மட்டும் ஏற்கனவே உள்ள ஊதிய விகிதத்தில் பள்ளிகளில் கழிப்பறைகளை சுத்தம் செய்யும் பணியினை நீட்டிப்பு செய்தும் அதற்கான செலவினத்தினை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் நகர்மன்ற தீர்மான எண்.136, நாள்.01.08.2022 அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு வழங்கப்பட்ட உத்திரவு 30.11.2022 உடன் முடிவடைவதால் மேலும் மூன்று மாதங்களுக்கு (01.12.2022 முதல் 28.02.2023 ) முடிய உள்ள காலங்களுக்கு நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினத்தினை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :** இராஜபாளையம் , ஏ.வி. எம் சர்வீஸ் பாயிண்ட் என்ற நிறுவனத்திற்கு ஏற்கனவே உள்ளள ஊதிய விகிதத்தில் பள்ளியின் கழிப்பறைகளை சுத்தம் செய்யவும் மற்றும் துாய்மை பணிகளைள மேற்கொள்ளவும் மூன்று மாதங்களுக்கு மட்டும் (01.12.2022 முதல் 28.02.2023 முடிய ) பணிகள் செய்ய

அனுமதித்தும், அதற்கான செலவினத்தினை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4683/2016/எச்1

**தீர்மானம் எண் : 172**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள்7

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள டி.எண். 76பி 6928 வாகனத்திற்கு புதிய டயர்கள் மற்றும் டயர் டியூப்கள் விநியோகம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.

| **வ.எண்.** | **விலைப்புள்ளித்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி** | **டயர் மற்றும் டியூப்களின் ஒன்றின் விலை விபரம்** |
|---|---|---|
| 1 | விஜய் டயர்ஸ் 10/1064 பாவூர்சத்திரம் தென்காசி மெயின் ரோடு இராமசந்திர பட்டணம் குணராமநல்லூர் | ரூ. 11500/– |
| 2 | எம்.எம். டயர்ஸ் ,149ஏ தென்காசி ரோடு சிவந்தி நகர் தென்காசி. | ரூ.11800/– |

மேற்படி விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1 ல் கண்டுள்ள விஜய் டயர்ஸ் 10/1064 பாவூர்சத்திரம் தென்காசி மெயின் ரோடு இராமசந்திர பட்டணம் குணராமநல்லூர் என்ற நிறுவனம் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :** குறைவான விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம் .

ந.க.எண்.1687/2022/எச்1

**தீர்மானம் எண் : 173**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 8

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள டி.எண். 76எப் 8885 மற்றும் இலகுரக வாகனங்களுக்கு புதிய டயர்கள் மற்றும் டயர் டியூப்கள் விநியோகம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.

| **வ.எண்.** | **விலைப்புள்ளித்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி** | **டயர் மற்றும் டியூப்களின் ஒன்றின் விலை விபரம்( டி.எண். 76எப் 8885)** | **டயர் மற்றும் டியூப்களின் ஒன்றின் விலை விபரம் (இலகுரக வாகனங்கள்)** |
|---|---|---|---|
| 1 | விஜய் டயர்ஸ் 10/1064 பாவூர்சத்திரம் தென்காசி மெயின் ரோடு இராமசந்திர பட்டணம் குணராமநல்லூர் | ரூ. 11500/– | ரூ. 3400/– |

| | | | |
|---|---|---|---|
| 2 | எம்.எம். டயர்ஸ் ,149ஏ தென்காசி ரோடு சிவந்தி நகர் தென்காசி. | ரூ.11700/– | ரூ.3600/– |

மேற்படி விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1 ல் கண்டுள்ள விஜய் டயர்ஸ் 10/1064 பாவூர்சத்திரம் தென்காசி மெயின் ரோடு இராமசந்திர பட்டணம் குணராமநல்லூர் என்ற நிறுவனம் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :** குறைவான விலைப்புள்ளியினை மன்றம்அனுமதிக்கலாம் .

ந.க.எண்.1816/2022/எச்1
**தீர்மானம் எண் : 174**
அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 9

தமிழக முதல்வர் அவர்களால் தடை செய்ய நெகிழி பொருட்களுக்கு மாற்றாக மஞ்சப்பை இயக்கம் தொடக்கப்பட்டு நடைமுறை படுத்தப்பட்டுள்ளது. மஞ்சப்பை இயக்கத்தின் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் அச்சடிக்க 12.10.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.

| வ.எண். | ஒப்பந்தபுள்ளித்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை (ஸ்டிக்கர் விலை விகிதம் + ஜிஎஸ்ட்டி) |
|---|---|---|
| 1 | KOVILPATTI SMALL SCALE INDUSTRIES SERVICE INDUSTRIAL CO – OPERTIVE SOCIETY LTD. 86A/7 MUTHU CPMPLEX NEW ROAD . KOVIL PATTI. | RS. 15+GST |
| 2 | TIRUNELVELI DISTRICT MULTI PURPOSE SERVICE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD. 67/5 DASH SPEEK COMPLEX . PERUMAL WEST CAR STREET TIRUNELVELI JUNCTION. | RS. 16+GST |
| 3 | THE THOOTHUKUDI DISTRICT, HI-TECH PRITING AND ALLIED SERVICE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD . 2 MUDUDKKU STREET, SOUTH BAZAAR KOVILPATTI. | RS. 16.50+GST |

மேற்படி ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண். 1 ல் கண்டுள்ள KOVILPATTI SMALL SCALE INDUSTRIES SERVICE INDUSTRIAL CO – OPERTIVE SOCIETY LTD. 86A/7 MUTHU CPMPLEX NEW ROAD . KOVIL PATTI கொடுத்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :** குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.947/2022/எச்1

**தீர்மானம் எண் : 175**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 10

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள டி.எண். 76எப் 8885 வாகனத்திற்கு கூடுதலாக டயர்கள் வாங்க வேண்டியிருப்பதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 7000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :** மேற்படி வாகனத்திற்கு கூடுதலான உத்தேச செலவினம் ரூ.7,000/– மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1687/2022/எச்1

**தீர்மானம் எண் : 176**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 11**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண் 71 நாள் 13.09.2021ம் தேதிய அரசாணையின்படி நமக்கு நாமே திட்டம் (NNT) 2021–22ம் ஆண்டு திட்டத்தின் கீழ் பொதுமக்களின் பங்களிப்புடன் பணிகள் மேற்கொள்வதற்கு சொர்ணபுரம் மேட்டுத் தெருவில் சிமெண்ட் தளகற்கள் சாலை அமைத்தல் பணிக்கு ரூ6.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதில் பொதுமக்கள் பங்குதொகையாக திரு.அபூபக்கர் என்பவர் ரூ2.20 இலட்சம் ஆணையாளர், தென்காசி நகராட்சி வங்கி கணக்கில் (கணக்கு எண் 612901096397) 11.03.2022ம் தேதியன்று செலுத்தப்பட்டது. தற்போது சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 27519-37/2021/P2, நாள் 31.03.2022ன்படி மேற்கண்ட பணிக்கு பொதுமக்கள் பங்குதொகையில் ரூ1.67 இலட்சம் மட்டும் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆகையால் திரு.அபூபக்கர் என்பவரால் செலுத்தப்பட்ட ரூ2.20 இலட்சத்தில், பங்குதொகை ரூ1.67 இலட்சம் போக மீதித் தொகை ரூ53000/-யை திரும்ப வழங்கும்படி விண்ணப்பித்துள்ளார். எனவே மேற்படி மீதித் தொகையினை திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 தென்காசி, திரு.அபூபக்கர் என்பவருக்கு ரூ53000/-ணய வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 177**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 12**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் G.O.(Ms) No.123 நாள் 09.09.2022ன்படி தென்காசி நகராட்சியில் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் சக்தி நகரில் புதியதாக பூங்கா அமைக்க ரூ21.80 இலட்சம் (மத்திய அரசு பங்கு தொகை ரூ7.12 இலட்சம், மாநில அரசு பங்கு தொகை ரூ 4.27 இலட்சம் மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ10.41 இலட்சம் ஆக மொத்தம் ரூ21.80 இலட்சம்) நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு திருநெல்வேலி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக, மண்டல செயற்பொறியாளர் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 178**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 13**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 23 முப்புடாதி அம்மன் கோவில் தெருவில் உள்ள அம்மன் கோவில் பின்புறமுள்ள பொது குடிநீர் குழாய் அப்பகுதியில் உள்ள பொதுமக்களால் உபயோகப்படுத்தப்படாமல் உள்ளது. எனவே தற்போது மேற்படி தெருவில் இருக்கும் பொதுகுடிநீர் குழாயினை அதே வார்டில் உள்ள அண்ணா நகரில் மாற்றம் செய்து பொதுமக்கள் குடிநீர் பெற ஏதுவாக மாற்றியமைக்கும்படி மேற்படி வார்டில் நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளதின் அடிப்படையில் முப்புடாதி அம்மன் கோவில் தெருவில் உள்ள அம்மன் கோவில் பின்புறமுள்ள பொது குடிநீர் குழாயினை அதே வார்டில் உள்ள அண்ணா நகரில் மாற்றியமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 179**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 14**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 5 களக்கோடி தெருவில் (வல்லகுளம்) உள்ள தண்ணீர் குழாய் அப்பகுதியில் உள்ள பொதுமக்களால் உபயோகப்படுத்தப்படாமல் உள்ளது. எனவே தற்போது மேற்படி தெருவில் இருக்கும் தண்ணீர் குழாயினை அதே தெருவில் வல்லகுளம் அருகில் மாற்றம் செய்து பொதுமக்கள் தண்ணீர் பெற ஏதுவாக மாற்றியமைக்கும்படி மேற்படி வார்டில் நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளதின் அடிப்படையில் மேற்படி வார்டின் ஏற்கனவே இருக்கும் இடத்திற்கு பதிலாக அதனருகே உப்பு தண்ணீர் குழாயினை மாற்றியமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 180**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 15**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 13 செங்கோட்டை ரோடு மேலவாலிபன் பொத்தையில் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தினால் கழிவுநீர் சரியாக வெளியேறாமல் ஆங்காங்கே சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலையில் உள்ளது. மேலும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டும் மேற்படி வார்டின் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் மழைநீர் வாடிகால் அமைக்கும் பணிக்கு தயார்செய்ப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ8.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 181**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 16**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 23 முப்புடாதி அம்மன் கோவில் தெருவில் (வள்ளுவர் தெரு) வசிக்கும் பொதுமக்கள் குடிநீர் பெறுவதற்கு மிகவும் சிரமம்படுவதால் அப்பகுதியில் புதியதாக ஒரு ஆழ்துளையுடன் கூடிய குடிநீர் தொட்டி அமைக்கவும், மற்றும் மேற்படி தெருவின் பிரதான சாலையில் உள்ள சிமெண்ட் குடிநீர் தொட்டியினை இடித்து அப்புறப்படுத்தி அதே இடத்தில் புதியதாக சின்டெக்ஸ் குடிநீர் தொட்டி அமைத்து பொதுமக்கள் பயன்பெற மேற்படி வார்டின் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார்செய்ப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 182**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 17**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 26 தெற்கு மேல கோய்க்கால் தெருவில் (அகமதுஷா தெரு) வசிக்கும் பொதுமக்கள் பயன்படுத்தி வரும் படிகட்டுகள் மிகவும் சேதமடைந்துள்ளதால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்கண்ட வார்டில் உள்ள படிகட்டுகளை சரிசெய்ய நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணி மேற்கொள்ள தயார்செய்ப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ0.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 183**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 18**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 32 பெருமாள் கோவில் தெருவில் உள்ள தலைமை தபால் நிலையம் பின்புறமுள்ள நகராட்சிக்கு சொந்தமான சுகாதார வளாகம் மிகவும் பழுதடைந்து பொதுமக்களால் சரிவர பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மேற்படி சுகாதார வளாகத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரியுள்ளதின் அடிப்படையில் தலைமை தபால் நிலையம் பின்புறமுள்ள நகராட்சிக்கு சொந்தமான சுகாதார வளாகம் பராமரிப்பு செய்து மராமத்து பணிகள் மேற்கொள்ள தயார்செய்ப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 184**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 19**

தென்காசி நகராட்சிக்கு அலுவலக பயன்பாட்டிற்காக புதியதாக வாங்கப்பட்ட பொலிரோ ஈப்பு வாகனத்திற்கு இந்நகராட்சியில் போதுமான ஓட்டுனர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்படி வாகனங்களை (நவம்பர் 2022 முதல் மார்ச் 2023 வரை) இயக்குவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச ரூ1.02 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 185**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 20**

இந்நகராட்சிக்கு சொந்தமான போகநல்லூரில் உள்ள உரக்கிடங்கில் தேங்கியுள்ள குப்பைகளை Bio-Mining மூலம் அப்புறப்படுத்தும் பணிக்கு தற்போது பணி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி நடைபெற ஏதுவாக Bio-Miningக்கு தேவையான இயந்திரங்கள் பொருத்தி இயக்குவதற்கு இரும்பிலான மேற்கூரை அமைக்க தயார்செய்ப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 186**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 21**

இந்நகராட்சிக்கு சொந்தமான போகநல்லூரில் உள்ள உரக்கிடங்கில் தேங்கியுள்ள குப்பைகளை Bio-Mining மூலம் அப்புறப்படுத்தும் பணிக்கு தேவையான இயந்திரங்கள் பொருத்தி இயக்குவதற்கு அடிதளம் (Basement) அமைக்க தயார்செய்ப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 187**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 22**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 21 கீழப்பேட்டை தெருவில் உள்ள அடிபம்பிலிருந்து குழாய் பதித்து அதனருகில் இருக்கும் வளர்பிறை மன்றம் சுற்றுசுவரின் அருகில் சின்டெக்ஸ் தொட்டி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அமைத்துதர மேற்படி வார்டின் நகர்மன்ற உறுப்பனர் அவர்கள் கோரியுள்ளதின் அடிப்படையில் தயார்செய்ப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 188**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 23**

தென்காசி நகராட்சி அலுவலகத்திற்க்கு வரிசெலுத்தவும், குடிநீர், சாலை, மழைநீர் வடிகால் வசதிகளுக்காகவும், பிறப்பு இறப்பு சான்று பெறவும் மற்றும் பல்வேறு கோரிக்கைகளுக்காகவும் வந்து செல்லும் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு நகராட்சி அலுவலகதில் உள்ள கழிப்பிடங்கள் மராமத்து பணிகள் மற்றும அலுவலக கட்டிட மேறகூரையை பராமரித்தல் ஆகிய பணிகளுக்கு தயார்செய்ப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 189**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 24**

இந்நகராட்சி அலுவலகம் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் உள்ள காய்ந்து பட்டுபோன மரங்களை வெட்டி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி மரங்களை பொதுஏலமிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 190**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 25**

இந்நகராட்சி பொதுபிரிவிலுள்ள பழைய தள்ளுவண்டிகளை பொதுஏலமிட இந்நகர்மன்ற தீர்மானம் எண் 117 நாள் 01.08.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 27.09.2022ம் தேதியன்று நடைபெற்ற பொதுஏலத்தில் கலந்து கொண்ட தென்காசி, திரு.உமர் சலீம், என்பவர் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ60,200/- கேட்டுள்ளார். மேற்படி ஏலக்கேள்வியை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 திரு.உமர் சலீம் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியான ரூ60,200/-யை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 191**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 26**

இந்நகராட்சியில் உள்ள நகராட்சி கணிணி அறையில் உள்ள AARGEE 5KVA Online UPSன் பேட்டரிகள் 10 எண்ணங்கள் வாங்கப்பட்டு சுமார் 12 வருடங்களுக்கும் மேலாகிவிட்டபடியால் UPS சரியான முறையில் இயங்கவில்லை. இதனால் அலுவலகத்தில் உள்ள கணிணிகள் அனைத்தும் பாதிப்படையும் நிலையில் உள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு உடனடியாக புதியதாக 10 எண்ணம் பேட்டரிகள் வாங்குவதற்கு உத்தேச செலவு தொகை ரூ78000க்கும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி 13.10.2022ம் தேதியன்று கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பைரவி பேட்டரீஸ்,<br>76/38,B/15, இரயில்வே பீடர் ரோடு,<br>M.K.V.K பள்ளி அருகில்,<br>தென்காசி. | ரூ78,000/- |
| 2 | ஸ்ரீ ராம் பேட்டரீ சென்டர்,<br>182, E-4/G S.N ஹை ரோடு<br>S.P.P கட்டிடம் (ஸ்டேட் பேங்க் எதிரில்)<br>ஸ்ரீபுரம், திருநெல்வேலி. | ரூ80,000/- |

அ.கு: 1 மேற்படி புதியதாக பேட்டரீகள் 10 எண்ணம் வாங்க உத்தேச செலவு தொகை ரூ78000/-யை மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட தென்காசி ஸ்ரீ பைரவி பேட்டரீஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 192**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 27**

இந்நகராட்சிக்கு சொந்தமான TN 72 U 0687 குடிநீர் டேங்கர் லாரியின் டயர்களுக்கு ரீ-பட்டன் போடப்பட்டு சுமார் 2 வருடங்களுக்கும் மேலாகிவிட்டதால் மேற்படி வாகனத்தின் டயர்கள் தேய்ந்து மோசமான நிலையில் உள்ளது. மேற்படி வாகனம் நகர எல்லைக்குள் குடிநீர் குழாய் இணைப்பு இல்லாத பகுதிகளில் வசித்துவரும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு குடிநீர் வழங்கப்பட்டுள் வருகிறது. எனவே பொதுமக்களின் நலனை கருத்தில்கொண்டு குடிநீர் டேங்கர் லாரிக்கு புதியதாக 6 எண்ணம் டயர்கள் வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ86000/-க்கும், மேற்படி வாகனத்தின் அவசர அவசியம் கருதி 13.10.2022ம் தேதியன்று கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | விஜய் டிரேடர்ஸ், | ரூ82,500/- |

| | | |
|---|---|---|
| | 10/1064 பாவூர்சத்திரம் – தென்காசி மெயின் ரோடு, இராமசந்திரபட்டணம், குணராமநல்லூர் தென்காசி | |
| 2 | MM டயர்ஸ், 149A தென்காசி ரோடு சாந்தி நகர், தென்காசி. | ரூ84,000/- |

அ.கு: 1 மேற்படி வாகனத்திற்கு புதியதாக 6 எண்ணம் டயர்கள் வாங்கிட உத்தேச செலவுத் தொகை ரூ86000/-யை மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட தென்காசி விஜய் டிரேடர்ஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 193**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 28**

இந்நகராட்சி பொறியியல் பிரிவிலுள்ள பழைய இரும்பு பைப்கள், மின்மோட்டார்கள், மின்மோட்டார் உதிரிபாகங்கள் மற்றும் அடிபம்பு உதிரிபாகங்கள் ஆகியவைகள் பொதுஏலமிட இந்நகர்மன்ற தீர்மானம் எண் 117 நாள் 01.08.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 27.09.2022ம் தேதியன்று நடைபெற்ற பொதுஏலத்தில் கலந்து கொண்ட இராஜபாளையம், M/s SS Trading, என்ற நிறுவனம் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ10,69,000/- கேட்டுள்ளார். மேற்படி ஏலக்கேள்வியை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 இராஜபாளையம், M/s SS Trading, என்ற நிறுவனத்தின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியான ரூ10,69,000/-யை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 194**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 29**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 18 நடுபேட்டை தெருவில் உள்ள பாபாக்கி மண்டபத்தின் எதிரில் உள்ள குடிநீர் தொட்டி கட்டிடம் மிகவும் சேதமடைந்து அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் போக்குவரத்திற்கும், வாகன போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. எனவே அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் உயிர்சேதத்தினை தவிர்க்கும் பொருட்டு மேற்படி குடிநீர் தொட்டியினை இடித்து அப்புறப்படுத்த ஆகும் உத்தேச செலவு தொகை ரூ10000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 195**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 30**

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 165 நாள் 09.09.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்ட பணிக்கு 28.09.2022ம்

தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வால்வு திருப்புனர்கள் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் காவலர்கள் (6 நபர்பள்) பணி பார்த்தல் | 6.90 | திரு G,சோமசுந்தரம் ஒப்பந்தக்காரர்<br>திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.40% குறைவு<br>1.59% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.40% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருG.சோமசுந்தரம் ஒப்பந்த்க்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 196**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 31**

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 166 நாள் 09.09.2022ல் ஒப்புதல் வழுங்கப்பட்ட பணிக்கு 28.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | தென்காசி, மாதாபுரம், திருமலையப்பபுரம், மன்னார்கோவில் ஆகிய நீரேற்றும் நிலையங்களில் உள்ள மின்மோட்டார்களின் ஸ்டார்ட்டர் மாட்டுவதற்கு தேவையான பொருட்கள் விநியோகம் செய்தல் | 4.90 | திரு S,முருகன் ஒப்பந்தக்காரர்<br>திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர் | 0.01% குறைவு<br>0.65% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருS.முருகன் ஒப்பந்த்க்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 197**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 32**

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 115 நாள் 01.08.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்ட பணிக்கு 28.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | ஊர்க்காடு தலைமை நீரூந்து நிலையத்திலிருந்து தென்காசி நீரூந்து நிலையம் வரை உள்ள பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்தல் மற்றும் பராமரித்தல் பணி | 9.60 | திரு S,முருகன் ஒப்பந்தக்காரர்<br>திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர் | 0.19% குறைவு<br>5.75% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.19% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருS.முருகன் ஒப்பந்த்க்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 198**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 33**

தென்காசி நகராட்சியில் பொது நிதி 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 75 நாள் 30.06.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்ட பணிக்கு 28.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | புதிய வார்டு எண் 10 மவுண்ட் ரோடு (புதுபள்ளிவாசல்) பகுதியில் உள்ள சிமெண்ட் தளக்கற்கள் (Paver Block Road) சாலையினை உயர்த்தி மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.50 | திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர்<br>திரு S,முருகன் ஒப்பந்தக்காரர் | 0.05% குறைவு<br>1.72% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருC.லெட்சுமனண் ஒப்பந்த்க்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 199**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 34**

இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேரூந்து நிலையத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-23ம் ஆண்டின கீழ் ரூ227.70 இலட்சம் மதிப்பீட்டில் அறிவுசார் மையம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு. K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற இருந்த நிலையில் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் மேற்படி பணியினை பழைய பேரூந்து நிலையத்தில் மேற்கொள்ள ஆட்சேபம் தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்படி இடத்திற்கு பதிலாக இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையம் வாகன நிறுத்துமிடம் அருகே உள்ள இடத்தில் பாதுகாப்பு அறை மற்றும் காவல்துறைக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் உபயோகமில்லாமல் உள்ளதால் அதனை இடித்து அப்புறப்படுத்திவிட்டு அதே இடத்தில் அமைப்பதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண் 148 நாள் 09.09.2022ன்படி நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் சம்மதம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே புதிய பேரூந்து நிலையத்தில் அறிவுசார் மையம் அமைக்கும் பணி மேற்கொள்ளபடவுள்ள இடத்தில் ஏற்கனவே இருக்கும் பழுதடைந்த கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ2.20இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 200**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 35**

இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு பி, பிளாக் – 33, நகரளவை எண்.17/2, ஏ 171/2பி – ல் அமைக்கப்பட உள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தென்காசி மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் கடித ந.க.எண்.1042/20–21 நாள்.13.10.2021ல் உத்தேச மனைப்பிரிவிற்கு குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி, தேவையான அடிப்படை வசதிகள் தார்சாலை, வடிகால் மற்றும் தெரு விளக்குகள் அமைக்க அடிப்படை வசதிகள் கட்டணமாக ரூ.16,80,000/–க்கு நகராட்சி பொறியாளரால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது இணையதள மூலமாக மனைப்பிரிவு அனுமதி வழங்க வேண்டியுள்ளதால் நகர்மன்ற தீர்மான பதிவேற்றம் செய்யப்பட்ட பின்னரே கேட்பு பட்டியல் பதிவிறக்கம் செய்ய வழி வகை உள்ளதாலும் மேற்கண்ட தொகையினை நகராட்சி கருவூலத்தில் மனுதாரரால் செலுத்தவும், தொகையினை செலுத்திய பின்பு மனைப்பிரிவு அனுமதி வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :** மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.2918/21/எப்1)

**தீர்மானம் எண் : 201**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 36

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 5 களக்கோடித் தெருவி சமுதாய நலக் கூடம் பின்பகுதியில் உள்ள சிமெண்ட் சாலை மிகவும் சேதமடைந்து மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்களின்

நலனை கருத்தில் கொண்டு மேற்படி சாலையை சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைக்க நகர்மன்ற உறுப்பினர் கோரியுள்ளதன் அடிப்படையில் மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ3.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 202**

அனுமதிக்கப்பட்டது.

நகர்மன்ற தலைவர்
தென்காசி நகர்மன்றம்

## தென்காசி நகர்மன்ற அவசரக் கூட்டம் 21.10.2022

**மன்றப்பொருள் 1**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதிகள் 2022 (வார்டு குழு மற்றும் சபா) குறித்து தமிழ்நாடு அரசால் அரசாணை(நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022 மற்றும் அரசாணை (நிலை) எண்.93, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022 வெளியிடப்பட்டுள்ளதாகவும், இவ்விரு அரசாணைகளை பின்பற்றி வார்டு குழு மற்றும் பகுதி சபா அமைக்க நடவடிக்கை எடுக்க கோரியும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண்.24470/2022/MA3 நாள்.08.08.2022 மற்றும் மேற்குறிப்பிட்டுள்ள அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுவதுடன் மேற்குறிப்பிட்டுள்ள அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு வார்டுகளுக்கு 4 எண்ணிக்கையிலான பகுதி சபா இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டவாறு பிரித்து உத்தேசிக்கப்பட்டுள்ளவை நகர மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அரசாணை(நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022ல் வார்டு குழு மற்றும் பகுதி சபா அமைப்பதற்கான தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான (வார்டு குழு மற்றும் பகுதி சபா) விதிகள் 2022 அமுல்படுத்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாணை(நிலை) எண்.93, நகராட்சி நிர்வாகம் மற்றம் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022ல் வார்டு குழு மற்றும் சபா அமைப்புகளுக்கு வழி நடத்திட செயலாளர்கள் நியமித்தல் மற்றும் அவர்தம் பணிகள் குறித்து வரையறைகள் உருவாக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய அரசாணைகள் மற்றும் விதிகளின்படி வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்கி இனிவரும் காலங்களில் செயல்படுத்த வேண்டியது அவசியம் என்பதால் மன்றம் மேற்கூறிய அரசாணைகள் மற்றும் விதிகளை பதிவு செய்யலாம்.

மேலும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான (வார்டு குழு மற்றும் பகுதி சபா) விதிகள் 2022ன் விதி எண்.9ன்படி பகுதி சபாக்களுக்கான எல்லை மற்றும் உள்ளடக்கிய

பகுதிகளுக்கான விவரத்தினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் உள்ளாட்சி நிர்வாக அமைப்புகளை கலந்தாலோசித்து மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டும் இதன் பொருட்டு உத்தேச பகுதி சபாக்களுக்கான எல்லை மற்றும் உள்ளடக்கிய பகுதிகளுக்கான பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்.1673/2022/எப்1)

**தீர்மானம் எண் : 203**

வருகை தந்த மன்ற உறுப்பினர்கள் 29நபர்களில் வார்டு எண்8,14,15,23,30 5உறுப்பினர்கள் மட்டும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 2

தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 14.09.2022ம் தேதிய ஆய்வு குறிப்பில் தென்காசி நகராட்சி பகுதிக்கு அருகில் உள்ள ஜகவீரராயப்பேரி குளத்தினுள் நகராட்சி கழிவுநீர் நேரடியாக கலப்பதை தடுக்கும் வகையில் வடிகட்டிகள் அமைக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி வடிகட்டிகள் அமைக்க தயார்செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ3.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 204**

அனுமதிக்கப்பட்டது

.

## மன்றப்பொருள் 3

தென்காசி நகராட்சி எல்லைகளில் (நகராட்சி தங்களை அன்புடன் வரவேற்கிறது மற்றும் நன்றி மீண்டும் வருக) நான்கு இடங்களில் Stainless SteelBoardல் Reflective Stickerவுடன்கூடிய அறிவிப்பு பலகை மற்றும் நகராட்சி அலுவலகதிற்க்கு தேவையான டேபிள் சேர் ஆகியவைகளுக்கான உத்தேச செலவு ரூ2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 205**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 4

தென்காசி நகராட்சிக்கு மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி SUIFD (State Urban Infrastructure Development Fund) நிதி 2022-23ம் ஆண்டின் கீழ் நகராட்சி பகுதிகளில் ஏற்கனவே உள்ள 2698 தெருவிளக்குகளை ஒளிர் உமிழ் விளக்குகளாக (LED) மாற்றுவதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) அரசாணை எண் 145 நாள் 14.10.2022ன்படி ரூ379.17 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசாணையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ379.17 இலட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து நிர்வாக

அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மேற்படி பணிக்காக தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீடு ரூ379.17 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி தெருவிளக்கு திட்டப்பணிகளின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:415/2020/இ1

**தீர்மானம் எண் : 206**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 5

தென்காசி நகராட்சி எல்லைக்குடபட்ட பகுதியில் குடிநீர் விநியோக பகிர்மானக் குழாய்கள் பதிக்கப்பட்டு அதன் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் நகர் பகுதிகளில் உள்ள சிறுமின்விசை பம்புகள், பொது குடிநீர் குழாய்கள் மற்றும் பகிர்மானக் குழாயகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யவும், தென்காசி நீரேற்றும் நிலையத்திலிருந்து தென்காசி நகர் பகுதிக்குள் பதிக்கப்பட்டுள்ள பிரதான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் கசிவுகளை சரிசெய்ய நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 31.09.2022ல் முடிவடைந்துவிட்டது. எனவே மேற்படி குடிநீர் பராமரிப்பு பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர்நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 207**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 6

இந்நகராட்சிக்கு சொந்தமான கடைஎண்.**38**ஐ திரு.முனீஸ்வரன் என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்த நிலையில் **2016–17**ம் ஆண்டு மேற்கண்ட கடையினை குத்தகைக்க எடுத்து ஒன்பது ஆண்டுகள் குத்தகை நிறைவடைந்துவிட்டதால் அரசாணை எண்.**198**, நாள்.**13.07.2007**ன்படி வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனவும் குத்தகைதாரர் வாடகை மறு மதிப்பீட்டிற்கு சம்மதிக்காத நிலையில் மறு ஏலம் விடப்பட

வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கடைக்கு வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட்டு குத்தகைதாரருக்கு உரிய அறிவிப்பு வழங்கப்பட்ட நிலையில் குத்தகைதாரரால் வாடகை உயர்வு செய்வதை நிராகரிக்கும் விதமாக தென்காசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S.No.328/2017ன்படி வழக்கு தொடரப்பட்டு மேற்கண்ட வழக்கானது நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பாகி உள்ளது. அதனை எதிர்த்து மேற்படி குத்தகைத்தாரரால் மீண்டும் தென்காசி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் A.S.No **23/2020** படி வழக்கு தொடரப்பட்டு மேற்கண்ட வழக்கானது நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பாகி உள்ளது. மேற்கண்ட வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் உரிய கேட்பு (ம) நிலுவைத் தொகை ரூ.**5,06,338/–** செலுத்தக்கோரி பலமுறை நேரிலும், கடித வாயிலாகவும் அறிவிப்பு அனுப்பப்பட்டும் குத்தகைதாரரால் நிலுவை (ம) நடப்பு தொகையை செலுத்தாத காரணத்தினால் கடையினை கடந்த **2022**ஆம் வருடம் மார்ச் மாதம் நகராட்சி ஊழியர்கள் மூலம் ஆணையாளர் அவர்களால் பூட்டி சீல் வைக்கப்பட்டது. மேலும் கணினியில் தற்பொழுது நடப்பு ஆண்டு வரை கேட்பு எழுப்பப்பட்டதாலும், கடை பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. இது நாள்வரை நிலுவை மற்றும் நடப்பு தொகையை செலுத்தாத காரணத்தினாலும் நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு மேற்கண்ட கடையினை புதிதாக மறு ஏலம் விட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 208**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றபொருள் 7**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்கள் **18,20,21,22,23,24,25** மற்றும் **48** ஆகிய எட்டு கடைகளும் **2002–2003** ஆம் ஆண்டு முதல் ஏலம் விடப்பட்டு குத்தகைத்தாரரால் கடை நடத்தப்பட்டு வந்த நிலையில் **2016–2017** ஆம் ஆண்டு மேற்கண்ட கடைகளுக்கு அரசாணை எண்.198, நாள்.13.07.2007ன்படி வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட்டு **2019–2020** ஆம் ஆண்டு வரை நிலுவையின்றி வாடகை குத்தகைத்தாரரால் செலுத்தப்பட்டு விட்டது.இந்நிலையில் கொரோனா தொற்று நோயின் காரணமாக ஊரடங்கு மேற்கண்ட **8** கடைகளின் குத்தகைத்தாரர்கள் **2020–2021** ஆம் ஆண்டு முதல் நாளது தேதி வரை வாடகை செலுத்தாமல் உள்ளதால் மேற்கண்ட கடைகளுக்கு பலமுறை அறிவிப்பு அனுப்பியும் கடையின் மேல் அறிவிப்பு ஒட்டப்பட்டும் வந்த நிலையில், மேற்படி குத்தகைதாரர் எவரும் உரிய தொகை செலுத்தவில்லை. மேலும் மேற்படியாரின் முகவரியில் தொடர்பு கொண்டபோதும் அம்முகவரியில் எவரும் தற்போது இல்லை என்பதாலும் மேற்கண்ட கடைகள் அனைத்தும் திறந்த நிலையிலேயே உள்ளதாலும் மேற்கண்ட தொகை வசூலிக்க இயலாத நிலையில் உள்ளது.ஆகவே மேற்படி கடைகளின் பாக்கியினை கணினியில் நீக்கம் செய்யவும், நிதி இழப்பினை கருத்தில் கொண்டு மறு ஏல நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 209**

அனுமதிக்கப்பட்டது.

நகர்மன்ற தலைவர்
தென்காசி நகர்மன்றம்